திரு. எம். அப்துல் லத்தீப்: தலைவர் அவர்களே, இன்று நிறைவு நாளாக இருக்கிற காரணத்தால், இந்தக் கேள்வியை நான் எழுப்ப விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது விரைவு நாளாகவும் இருக்க வேண்டும் என்பது முக்கியம் (சிரிப்பு).

(முற்பகல் 9-50)

3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஃ) சென்னையில் குடிநீர்த் தட்டுப்பாடு.

திரு. எம். அப்துல் லத்தீப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோரும் விவசாயத்திற்குத் தேவையான நீர்ப் பாசன நீர் கிடைக்க வேண்டுமென்பதற்காகக் குரல் எழுப்பினார்கள். நான் சென்னை நகரத்தில் இருக்கக்கூடியவன். சென்னை நகரத்திற்குக் குடிநீர் வழங்கக்கூடிய மூலங்களாக இருக்கின்ற புழலேரியிலே கூட இப்போது தண்ணீர் மிகவும் கீழ் மட்டத்திலே இருப்பதாகவும், வெகு விரைவில் மிகப் பெரிய குடிநீர்ப் பஞ்சம் சென்னையிலே ஏற்படும் என்றும் பத்திரிகைகளிலே கூட படம் போட்டுக் காட்டியிருக்கிறார்கள். எனவே இனி வரும் வாரங்களிலே குடிநீருக்குப் பெரும் பஞ்சம் ஏற்பட்டு விடுமோ என்ற ஒரு ஐயம் ஏற்படுகிறது. இது குறித்து இந்த அரசு அந்தக் குடிநீர் பஞ்சத்தைப் போக்குவதற்கு மாற்றுத் திட்டங்கள் ஏதாவது வைத்திருக்கிறதா? ஏதாவது துரித நடவடிக்கைகளில் அரசு ஈடுபடுகிறதா? அப்படியென்றால், அந்த விவரங்களை இந்த மன்றத்தில் அறிவிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. என். கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முஸ்லீம் லீக் கட்சியைச் சார்ந்த தலைவர் லத்தீப் அவர்கள் சென்னை நகரத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர். அதே போன்று நானும். 13 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றோம். மொத்தம் 4 அமைச்சர்களையும் சேர்த்து 13 உறுப்பினர்கள் சென்னை நகரத்தில் இருக்கின்றோம். அவருக்கு இருக்கின்ற அக்கறை சென்னை நகர மக்கள் மீது எங்களுக்கும் உண்டு. எனவே குடிதண்ணீர் பிரச்சினையை இந்த அரசு நல்ல முறையில் தீர்த்து வைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

1989 பிப்ரவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே இந்த இரண்டு உறுப்பினர்கள் மட்டும் பேசப் போகிறார்களா? அல்லது 13 உறுப்பினர்களும் பேசப் போகிறார்களா?

திரு. எம். அப்துல் லத்தீப்: தலைவர் அவர்களே, எல்லோருடைய சார்பாகவும் பேச இருக்கிறோம். அமைச்சரவர்கள் ஏதாவது இது குறித்து விளக்கம் தருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதுகுறித்து முதலிலே பதில் சொல்லியிருக்கிறேன். "மெட்ரோ வாட்டர்" உட்பட அனைத்து அதிகாரிகளையும் அழைத்துப் பேசியிருக்கிறேன். கூடிய வரையில் என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க முடியுமோ, அந்த அளவில் நடவடிக்கைகளை எடுக்கச் சொல்லியிருக்கிறேன். மீண்டும் மீண்டும் இந்த மாதிரிக் கேள்விகளைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

6. சட்ட முன்வடிவுகள்.

(அ) மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/1989). திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்) இதை முன்மொழிவார்.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1989) ஆய்வுக்கு* எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

* **திரு. ரா. சொக்கர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில நாட்களுக்கு முன்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எந்தெந்த வழிகளில் எல்லாம் அரசாங்கத்திற்கு வர

* 20—2—1989 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.